

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தி. வேல்முருகன் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கையை பாராட்டி நன்றி தெரிவித்தார்.



முதல்வர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ‘இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர்ஸ் நிலதரகர்கள் நலச் சங்கத்தின்’ அகில இந்திய தலைவர் விருகை வி.என்.கண்ணன் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தார்.



முதல்வர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ”அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகத்தின் நிறுவனர்தலைவர் திருச்சி பொன்.முருகேசன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.



சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை கோவில் பூசாரிகள் நலச்சங்கத் தலைவர் பி.வாசு, சந்தித்து தங்களது கோரிக்கைகளை ஏற்று அவ்வப்போது அரசாணைகள் வெளியிடுவதற்கு நன்றி தெரிவித்தும், நடைபெறும் தேர்தலில் தங்களது சங்கத்தினர் 40 தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரிப்பதாகவும் தெரிவித்தனர்.

### விருதுநகர் – தேனி ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்துப் பிரச்சாரம்!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு – அலைகடலென திரண்டு வாரீர்!

## சேடப்பட்டி மு.மணிமாறன் வேண்டுகோள்!

மதுரை, மார்ச் 23-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தபடி நாற்பதும் நமதே நாடும் நமதே என்பதை உறுதிப்படுத்தும் வகையில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை அமோக வெற்றி பெறச் செய்திடும் வகையில் மதுரை தெற்கு மாவட்டத்தில் விருதுநகர், தேனி நாடாளுமன்றத்திற்கு உட்பட்ட திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டியில் இன்று (23.03.2024) மாலை கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொள்கிறார்.

இதில் திருமங்கலம், திருப்பரங்குன்றம் மற்றும் உசிலம்பட்டி தொகுதிகளைச் சார்ந்த கழக உடன்பிறப்புகள், கூட்டணி கட்சியினர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் அலைகடலென திரண்டு வரவேண்டும் என மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர்



சேடப்பட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் கொடுத்துள்ளார்,

அதன் விபரம் வருமாறு:-

நாடு போற்றும் நம் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இந்தியா கூட்டணி வேட்பாளர்களை அமோக வெற்றி பெற செய்திடும் வகையில் பல்வேறு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றது. மேலும் இதற்கு சிறப்பு சேர்க்கும் வகையில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நம் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தீவிர பிரச்சாரம் செய்து வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக மதுரை தெற்கு மாவட்டம் விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருமங்கலம், திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி மக்கள் மத்தியில் வாக்கு சேகரிக்கும் வகையில் திருமங்க லத்தில் இன்று (23.03.2024 -சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு தேர்தல் பிரச்சாரம் செய்ய வருகிறார்.

அதைத்தொடர்ந்து தேனி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட உசிலம்பட்டி தேவர் சிலை முன்பாக மாலை 6 மணியளவில் கழக வேட்பாளர் தங்க தமிழ்ச் செல்வனை ஆதரித்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு மாபெரும் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற தேர்தல் தொகுதி பொறுப்பாளர்கள் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, விருதுநகர் தெற்கு, வடக்கு மாவட்ட செயலாளர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மேலும் இவ்விரு தேர்தல் பிரச்சாரத்தில் மதுரை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக முகவர்கள் மற்றும் திருமங்கலம், திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி தொகுதி கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் மற்றும் கூட்டணிகட்சி நிர்வாகிகள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சேடப்பட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




தூத்துக்குடி தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் ‘இந்தியா’ கூட்டணியின் கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

### நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு – ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட –

# தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், மார்ச் 23 -

தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின், ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நாளை (24.03.2024 -ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணியளவில் வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், கடலூர், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிகளின் தேர்தல் பணிகளை சிறப்பான முறையில் எதிர்கொள்வது சம்பந்தமாக, தி.மு.க. உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் தி.மு.க. - இந்தியா





கூட்டணி கட்சிகளின் ஒருங்கிணைந்த கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், மனிதநேய மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, எம்.ஜி.ஆர்.கழகம், கொங்கு நாடு மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய லீக், இந்திய சமூக நீதி இயக்கம், தமிழ் மாநில தேசிய லீக், திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம், மாவீரன் மஞ்சள் படை, முக்குலத்தோர் புலிப்படை, மக்கள் விடுதலைக் கட்சி ஆம் ஆத்மி கட்சி, யாதவ மக்கள் இயக்கம், தேவேந்திரகுல மக்கள் முன்னேற்றப் பேரவை, ஆதி தமிழர் கட்சி ஆகிய கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.




விருதுநகர் தெற்கு வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தலைவர்கள் தங்கராஜ், செல்வமணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தங்கப்பாண்டியன், சேர்மன் சுப்புராஜ், வர்த்தக அணி அமைப்பாளர் வனராஜ், முன்னாள் எம்.எல்.ஏ. வி.பி.ராஜன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா, ராஜா அருள்மொழி, நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், கே.ஜி.ராஜகுரு, சேர்மன் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, வர்த்தக அணி மல்லாங்கிணறு போஸ், தங்கத் தமிழ்வாணன், இளைஞர் அணி கிருஷ்ணகுமார், பொதுக் குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன் மற்றும் மாவட்ட நகர ஒன்றிய அணிச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.